கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 61வது நாள்!

## கொளத்தூர் கிழக்குப் பகுதியில் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஏப். 22-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 61வது நாள் கொளத்தூர் கிழக்கு பகுதி இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் உணவு வழங்கினார்கள்.



தமிழ்நாடு முதலமைச் சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 61 ஆம் நாளான - கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (21.4.2025) கொளத்தூர் கிழக்கு பகுதி 1) வட்டம் 67- கோமதி அம்மன் கோயில் தெரு ஜார்ஜ் காலனி, திரு.வி.க நகர், சென்னை. 2) வட்டம் 67 அ- தில்லை நாயகம் தெரு, கான் சிக்கன் அருகில், சென்னை. ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர் செல்வம், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ். சித்திக், எஸ்.தனசேகர், கே. சாரதா, டி.யோகப்பிரியா, என்.தாவூத் பீ, பி.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: பி.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என். பொன்முடி, கே.ஜார்ஜ் குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா. அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச் செல்வன், என்.சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக் குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

---

திருநீர்மலை ரங்கநாத பெருமாள் கோயில்

# பணியாளர்களுக்கான குடியிருப்புகள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படுமா?

## சட்டப்பேரவையில் பல்லாவரம் இ.கருணாநிதி கேள்வி!

**சென்னை, ஏப்.22-**

**சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது பல்லாவரம் தொகுதி இ.கருணாநிதி கேட்ட கேள்வியும் அதற்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு அளித்த பதிலும் வருமாறு:-**



**இ.கருணாநிதி:** பல்லாவரம் தொகுதி, திருநீர்மலை, ரங்கநாத பெருமாள் திருக்கோயில் பணியாளர்களுக்கான குடியிருப்புகளை பயன்பாட்டிற்கு கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் பி.கே. சேகர்பாபு:** உறுப்பினர் அவர்கள் கோரிய திவ்யதேசம் என்பது 108 திவ்யதேசங்களில் குறிப்பிட்டு சொல்ல வேண்டுமென்றால் 61வது திவ்ய தேசம். 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் 12 அர்ச்சகர் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. 92 சதவிகிதப் பணிகள் நிறைவுற்றிருக்கின்றன. அடுத்த மாத இறுதிக்குள்ளாக மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதோடு, கூடுதலான தகவல். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, 186 கோடி ரூபாய் செலவில் சுமார் 586 அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்கள் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. அதில் 42 குடியிருப்புகள் அர்ச்சகர்களிடம் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப் பட்டிருக்கிறது என்பதையும் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, அடுத்த மாத இறுதியில் நானும், அந்த மாவட்டத்தினுடைய அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்களும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்களும் ஒன்றாகச் சென்று அந்த 12 குடி யிருப்புகளை அர்ச்சகர்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைப்போம் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**இ. கருணாநிதி:** அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதே நேரத்தில், பல்லாவரம் தொகுதியில் இருக்கின்ற ரங்கநாத பெருமாள் கோயிலுக்கு நேற்று முன்தினம் ஒரு இலட்சம் பக்தர்கள் வந்து சென்றிருக்கிறார்கள். குறிப்பாக, தமிழநாட்டில் ஒரு முக்கியமான பெருமாள் கோயில். எல்லோரும் ஆந்திர மாநிலத்திற்குச் சென்று வெங்கடேசப் பெருமாளை தரிசிக்கின்ற அளவிற்கு இந்தக் கோயிலும் வளர்ந்து வருகிறது. அந்த வகையிலே அந்தப் பகுதிக்கு ஏற்கெனவே, தமிழ்நாடு முதல்வர் அவர்கள், அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, ரூபாய் 10 கோடி செலவில் ரோப் கார் அறிவித்திருக்கிறார்கள். அந்தப் பணிகள் எப்போது தொடங்கப்படும்? அதேநேரத்தில், அந்தக் கோயில் வளாகத்தைச் சுற்றி underground cableபுதைவடப் பணிகள் முடிவு பெற்றுள்ளன. இன்னும் மின் இணைப்புகள் வழங்கப்படவில்லை. எப்போது மின் இணைப்புகள் வழங்கப்படும்? ரோப் கார் சேவை எப்போது தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் பி.கே. சேகர்பாபு:** உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று நானும், அந்த மாவட்ட அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களும், உறுப்பினர் அவர்களும் ஒருங்கிணைந்து அந்தத் திருக்கோயிலுக்கு படி வழியாகச் சென்று இறைதரிசனம் மேற்கொண்டோம். அதனடிப்படையில் முதலமைச்சர் அவர்களிடத்தில் வைத்த கோரிக்கைக்கேற்ப 19 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் ரோப் கார் அமைப்பதற்கு அரசினுடைய ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. வெகு விரைவில் ஒப்புதல் கிடைத்துவிடும். இதில் கூடுதல் தகவல் என்னவென்றால், அதற்குண்டான நிதி ஒட்டுமொத்தமாக அரசே மானியமாக வழங்குகின்றது என்ற ஒரு செய்தியைப் பதிவு செய்து, கூடிய விரைவில் அந்த ரோப் காருக்குண்டான பணிகள் துவக்கப்படும் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இ. கருணாநிதி:** பொழிச்சலூர் ஊராட்சியில் அகஸ்தீஸ்வரர் ஆரம்ப உடனுறை கோயில், பிடாரி கல்வி அம்மன் கோயில், குரோம் பேட்டை அஸ்தினாபுரத்தில் உள்ள பிரசன்ன யோக ஆஞ்சநேயர் கோயில், பம்மல் பகுதியில் உள்ள சூரியம்மன் கோயில் ஆகிய திருக்கோயில்கள் பல்லாவரம் தொகுதியில் குடமுழுக்கு நடைபெற வேண்டிய கோயில்களாக உள்ளன. மக்கள் அனைவரும் மிகுந்த ஆர்வத்தோடு எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமின்றி, நெமிலிச்சேரி பகுதியில் சிவன் கோயில் குளத்தைத் தூர்வார வேண்டும். அதே போல, பொழிச்சலூர் ஊராட்சியில் உள்ள பிடாரி கல்வி அம்மன் கோயில் குளத்தைத் தூர்வாரி, நடைபாதைகள் அமைக்க அரசு முன்வருமா என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே. சேகர்பாபு:** அவர் Jesusஐ கும்பிடுவதாக இருந்தாலும் பரவாயில்லை. பல இந்து கோயில்களுக்குச் சென்று வருகிறார் என்பது இதிலிருந்து தெரிகிறது. உறுப்பினர் அவர்கள் மூன்று திருக்கோயில்கள் தொடர்பான திருப்பணிகள் குறித்துக் கேட்டுக்கொண்டிருக்கிறார். அந்தப் பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. குறிப்பாக இரண்டு குளங்களைப் பற்றிக் கேட்டிருக்கின்றார். அதில் ஒரு குளம் தொடர்பான பணிகள் ரூ.19 இலட்சம் செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. மற்றொரு குளம் தொடர்பான பணிகளை உபயதாரர் நிதியில் செய்வதாக அறிவித்திருந்தார்கள். அவர் தற்போது அதற்கு முன்வரவில்லை. ஆகவே, உபயதாரர் நிதி கிடைக்காத பட்சத்தில், திருக்கோயில் ஆணையரின் பொதுநல நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கூடிய விரைவில் அப்பணி மேற்கொள்ளப்படும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்த ஆட்சி ஏற்பட்டபிறகு இன்று வரை சுமார் 2,886 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளன என்பதையும் உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி தி.மு.க சார்பாக தமிழ்நாடு துணை முதல்வரும் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் நல்லூர் ஊராட்சி அம்பேத்கார் நகர் ஆட்டோ ஸ்டாண்டு அருகில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல.ஏ., கோடை வெப்பத்தை தணிக்க பொதுமக்களுக்கு தர்பூசணி, கிரிணிபழம், வெள்ளரிக்காய் உள்ளிட்ட பழங்களை வழங்கி நீர், மோர் பந்தலை திறந்து வைத்தார். உடன் ஒன்றிய, மாவட்ட நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை சோழவரம் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் சிவசங்கர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.



எழும்பூர் தொகுதி, வார்டு எண்.77, புளியந்தோப்பு, போகிபாளையத்தில் உள்ள சென்னை உருது தொடக்கப் பள்ளி வளாகத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் ஒரு கோடியே தொண்ணூறு இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக பள்ளி வகுப்பறைகள் கட்டும் பணிகளைக் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஆய்வு செய்தார்.

---

மத்திய சென்னை தொகுதியில் அமைந்துள்ள

# எழும்பூர் ரயில் நிலையத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் பெயரைச் சூட்டுக!

## தென்னக இரயில்வேயின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் தயாநிதி மாறன் எம்.பி. கோரிக்கை!

**சென்னை, ஏப்.22-**

**தென்னக இரயில்வேயின் சென்னை கோட்டத்திற்கு உட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான கலந்தாலோசனைக் கூட்டத்தில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் வைத்த கோரிக்கைகள் வருமாறு :-**



தமிழ்நாட்டை ஐந்து முறை ஆண்ட முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவினை போற்றிடும் வகையில் மத்திய சென்னை தொகுதியில் அமைந்துள்ள எழும்பூர் இரயில் நிலையத்திற்கு அவர்களது பெயரினை சூட்டிட வேண்டும்.

ரயில் நிலையங்களில் பொது மக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பதை உறுதி செய்ய, குறைந்த பட்சம் நான்கு மாதங்களுக்கு ஒருமுறை, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் ரயில்வே அதிகாரிகளுடன் ஆய்வுகள் நடத்திட ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

தெற்கு ரயில்வேயில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளில் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். ரயில்வே அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளில் மக்களின் பிரதிநிதிகளாக அவர்களை ஈடுபடுத்துவது மிக முக்கியமாகும். கடந்த காலங்களில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளில், குறிப்பாக சென்னை எழும்பூர் நிலையத்தின் மறுசீரமைப்பிற்கு பிரதமர் அடிக்கல் நாட்டியபோது, தேர்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதி களுக்கு உரிய அங்கீகாரம் தரப்படவில்லை. எனவே மேற்குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்கள் வரும் காலங்களில் நிகழாமல் தவிர்க்கப்பட வேண்டும்.

ரயில்வே ஆலோசனைக் குழுவை சார்ந்த பிரதிநிதி களுக்கு உரிய அதிகாரம் அளித்திட வேண்டும். வெறும் பெயரளவிலான பொறுப்பாக அவை அல்லாமல் இவர்களுக்கும் ரயில்வே அதிகாரிகளுக்கும் இடையே சுமூகமான நடைமுறையை உறுதி செய்வதற்காக அவர்களின் கருத்துக்களும் தொடர்ந்து பரிசீலிக்கப்பட வேண்டும், ஆலோசனைக்குழு உறுப்பினர்களை ஆய்வின் போது உடன் அழைத்து செல்லும் நடைமுறையை வருங்காலங்களில் பின்பற்றப்பட வேண்டும்.

இரயில் நிலையங்களில் பேட்டரி வாகனங்கள் சென்னை சென்ட்ரல், எழும்பூர் மற்றும் அனைத்து MRTS & புறநகர் ரயில் நிலையங்களிலும் முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளி பயணிகளுக்கு போதுமான அளவு பேட்டரி மூலம் இயக்கப்படும் வாகனங்கள் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக முதியவர்கள் அதிகமாக பயன்படுத்தும் தாம்பரம், மாம்பலம், சேத்துப்பட்டு, கடற்கரை, பார்க் டவுன் பெரம்பூர், கோடம்பாக்கம் மற்றும் புறநகர் இரயில் நிலையங்களில் இதுபோன்ற பேட்டரி வாகனங்கள் இன்றியமையாததவையாகும்.

மின்தூக்கி மற்றும் நகரும் படிக்கட்டுகளின் (Lift & Escalator) செயல்பாடுகள் இரயில் நிலையங்களில் உள்ள பெரும்பாலான மின்தூக்கிகள் செயல்படாதவையாக அல்லது நிரந்தர "பராமரிப்பு" நிலையில் உள்ளன. இது விரைவில் சரி செய்யப்பட வேண்டும். சென்னை சென்ட்ரல் மற்றும் எழும்பூர் மற்றும் தாம்பரம் ரயில் நிலையங்களை முழுவதுமாக கடக்க முதியவர்கள் பெரும் சிரமத்தை சந்திக்கின்றனர். அனைத்து நடைமேடை பாதைகளிலும், MRTS மற்றும் புறநகர் ரயில் நிலையங்களிலும் தேவைப்படும் இடங்களில் எஸ்கலேட்டர்களை அமைக்க தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

**பார்க்கிங் வசதிகள்**

பார்க்கிங் வசதிகளை மேம்படுத்தவும் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தை தவிர மற்ற எல்லா இரயில் நிலையங்களிலும் 4சக்கா வாகனங்கள் நிறுத்துவதற்குப் போதுமான இடம் இல்லை, மேலும் பெரும்பாலான MRTS & புறநகர் ரயில் நிலையங்களில் 2சக்கர வாகன நிறுத்தம் ஏற்கனவே நிரம்பி வழிகிறது. அந்த வகையில் எழும்பூர் ரயில் நிலை யத்திற்கு அடுக்கு மாடி வசதி கொண்ட பல்நோக்கு கார் பார்க்கிங் அமைக்க வேண்டும்.

மேற்கூரை பராமரிப்பு கடந்த மழைக்காலங்களில், சென்னை சென்ட்ரல், எழும்பூர், MRTS மற்றும் புறநகர் ரயில் நிலையங்களில் பயணிகள் தங்களை மழையில் இருந்து தற்காத்துக் கொள்ள போதுமான மேற்கூரை வசதிகள் இல்லை என்று புகார் கூறியுள்ளனர். எனவே அதனையும் கவனத்தில் கொண்டு பராமரித்திட வேண்டும்.

குறுகிய நேர தங்கும் அறை மற்றும் பயணிகளின் பொருட்களைப் பாதுகாக்கும் அறையின் வசதிகளை மேம்படுத்துதல் சென்னை சென்ட்ரல் மற்றும் எழும்பூர் ஆகிய இரண்டு இரயில் நிலையங்களிலும் நவீனமயமாக்கப்பட்ட பொருட்கள் பாதுகாக்கும் அறைகள் மற்றும் குறுகிய நேரம் தங்கும் வசதிகள் போதுமானதாக இல்லை. ஏற்கனவே இருப்பவையும் முறையாகப் பராமரிக்கப்படாமல் செயலிழந்து, தரம் குறைந்து மக்களால் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. எனவே குறுகிய நேர பயணிகள் காத்திருக்கும் அறை மற்றும் பொருட்களை பாதுகாக்கும் அறைகள் நவீன முறையில் மேம்படுத்தப்பட்டு, நீண்ட தூரம் பயணிக்கும் பயணிகளுக்கு அல்லது ரயில்கள் மாறி பயணம் செய்யக் காத்திருக்கும் பயணிகள் தங்குவதற்கு வேறு இடம் தேடி அலையாதவாறு அதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்திட வேண்டும்.

நகரும் படிக்கட்டுகள் (ESCALATOR) வசதிகள் கொண்ட நடை மேம்பாலங்கள்அளவுக்கடந்த கூட்டம் மற்றும் போக்குவரத்து நெரிசல் காரணமாக இரயில் நிலையங்களுக்கு வெளியே பல்வேறு விபத்துகள் பதிவாகியுள்ளன. எனவே இதனை கருத்தில் கொண்டு அனைத்து ரயில் நிலையங்களுக்கு வெளியே, எஸ்கலேட்டர்களுடன் கூடிய நடை மேம்பாலங்களை உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

**டிஜிட்டல் அறிவிப்பு பலகைகள்**

டிஜிட்டல் அறிவிப்பு பலகைகள் அனைத்து புறநகர் மற்றும் MRTS நிலையங்களிலும் முறையான தகவல் காட்சி அமைப்புகள் இல்லாததால், இரயில்களில் ஏறும்போது நெரிசல் மற்றும் இடையூறு ஏற்படுகிறது. இரயில்களின் வருகையைக் குறிக்கும் வகையில் இரயில்நிலைய நடைமேடைகளில் கவுண்ட்டவுன் டைமர்களுடன் கூடிய போதுமான டிஜிட்டல் அறிவிப்புப் பலகைகள் பொருத்த வேண்டும். அவ்வாறு அமைக்கப்படும் டிஜிட்டல் அறிவிப்புப் பலகைகளை சுற்றுலாவை மேம்படுத்தவும், விழிப்புணர்வை அதிகரிப்பதற்காகவும் பொதுத் தகவல்களைக் காண்பிக்கவும் காட்சிப் படுத்தலாம்.

MRTS இரயில் நிலையங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் LIBU MRTS இரயில் நிலையங்களில் உருவாக்கப்பட்ட வணிக இடங்களில் போதிய வெளிச்சம் மற்றும் கண்காணிப்பு வசதி இல்லாததால் அவ்விடங்கள் சமூக விரோத செயல்களின் கூடாரமாக மாறிவருகின்றன. தூய்மைப் பராமரிப்பு, போதுமான வெளிச்சம், மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகள் இவை அனைத்தும் MRTS இரயில் நிலையங்களில் சமூக விரோத செயல்களை தடுக்க வழி வகுக்கும்.

அனைத்து இரயில் நிலையங்களிலும் விரிவான பாதுகாப்பு வழிமுறைகள் & CCTV ஆகியவற்றை பொருத்தப்பட வேண்டும். இரவு நேரங்களில் பயணம் செய்யும் பணிபுரியும் பெண்களுக்கு நம்பிக்கையை அதிகரிக்கும் வகையில் ரயில் நிலையங்களில் பெண் பாதுகாப்புப் பணியாளர்களின் இருப்பை அதிகரிக்க வேண்டும்.

புறநகர் வழித்தடங்களில் கழிப்பறை வசதிகள் பயணிகளின் வசதிக்காக புறநகர் ரயில் நிலையங்களில் மெட்ரோ ரயில் நிலையங்களில் அமைக்கப்பட்டிருப்பது போன்ற நவீன மற்றும் சுகாதாரமான கழிப்பறை வசதிகளை அமைத்திட வேண்டும். பெண்கள் பயணம் செய்யக் கூடிய பெட்டிகளிலும் சிறந்த சுகாதார வசதிகளை வழங்குவது காலத்தின் தேவை மட்டுமல்லாது புறநகர் இன்றியமையாததுமாகும். இரயில் பயணிகளுக்கு

நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் நிலுவைத் தொகையை சரியான நேரத்தில் வழங்குதல் தெற்கு ரயில்வேயில் நிலுவையில் உள்ள மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியினை திரும்பப் பெறுவதற்கு பல மாதங்கள் ஆனது. அதுவும் ஓரளவு மட்டுமே கிடைத்துள்ளது. வட்டித் தொகை இன்னும் திரும்ப வரவில்லை. இதனையும் கவனத்தில் கொண்டு விரைந்து வழங்கிட வேண்டும்.

இவ்வாறு தயாநிதி மாறன் எம்.பி. கோரிக்கை விடுத்தார்.


